தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

*மதுரை - புதன்கிழமை - செப்டம்பர் 27, 1995*

# உயிர் கொடுக்கும் வங்கி "ஜீவன்"

நிதி நிறுவனங்களாகிய வங்கிகள் -பொருளாதார நடவடிக்கைகளின் உயிர்ப்பு மையங்கள். அதைப்போலவே ரத்த தான வங்கிகள். ஆபத்தான நிலையில் இருப்பவர்களுக்கும், விபத்தில் படுகாயமடைந்தவர்களுக்கும் 'உயிர் கொடுக்கும்' வங்கிகளாகும். மனித நேயத்தை இலட்சியமாக இவ்வங்கிகள் கொண்டிருப்பதாலேயே, பிரபல தலைவர்களின் விழாக்களின்போதும், மறைந்த தலைவர்களின் நினைவு நாட்களின் போதும் ரத்த தானத்தை ஒரு திட்டமாக செயல்படுத்தி வருகிறார்கள்.

ரத்த வங்கிகளில் மூன்று வகைகள் உண்டு. ஒன்று அரசு மருத்துவமனைகளில் அமைந்துள்ள வங்கி. அடுத்து வணிக அடிப்படையில் அமைந்துள்ள தனியார் வங்கி. மூன்றாவதாக தொண்டு ஆர்வ நிறுவனங்கள் நடத்தி வரும் வங்கி.

இவ்வங்கிகளில் ரத்ததானம் செய்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பணத்திற்காக ரத்தத்தை விற்பவர்கள். வாழ்க்கையின் 'அவலத்திற்கு' இது ஒரு சாட்சி. இத்தகைய ரத்தங்களில் சிலவற்றில் -பலவகை நோய்க்கிருமிகள் இருக்கக்கூடும்.

எனவே, ரத்த வங்கியில் சேமிக்கப்பட்ட ரத்தத்தை நவீன கருவிகளைக்கொண்டு சுத்திகரிப்பதற்கான புதிய ரத்த வங்கி ஒன்று சென்னையில் இருநாட்களுக்கு முன் துவங்கப்பட்டுள்ளது. ஆபத்தான நிலையில் உள்ளவர்களுக்கு உயிர்கொடுக்க பணியாற்றும் இந்த தொண்டு நிறுவன வங்கிக்கு "ஜீவன்" என்ற பொருத்தமான பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

எல்லாவகையான ரத்த வங்கிகளையும் தூய்மைப்படுத்த இத்தகைய சுத்திகரிப்பு வங்கிகளை அமைப்பது அளப்பரிய மனிதாபிமானத்தொண்டாகும். இதன் மூலம், ரத்த வங்கிகளில் முழு நம்பிக்கையுடன் நோயாளிகள் ரத்தம் பெற்று மறுவாழ்வு காணமுடியும்.

**Donate Blood and Save Lives**